கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
47	இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	167,31,85	-	-
48	போக்குவரத்துத் துறை	922,26,32	116,00,03	8
49	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	99,24,71	1,71,45	1
50	ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	19,435,80,00	-	-
51	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	501,00,82	-	-
52	மாற்றுத் திறனாளிகள் நலத் துறை	341,50,31	1,80,94	1
53	சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை	819,23,92	-	1
54	வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	207,95,39	59,07,35	-
	பெரு மொத்தம்	112,173,54,09	19,757,75,94	2,340,60,32

8. இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, 2018-2019, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2018-2019 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்கள் குறித்த இறுதித் துணை நிதிநிலை அறிக்கையைப் பேரவைக்கு அளித்தல். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018-2019 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை@ இம்மாமன்றத்தின்முன் வைக்க விழைகிறேன். துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவானதொரு அறிக்கை இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இப்பேரவையின்முன் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்தத் துணை மதிப்பீடுகள் மொத்தம் 17,714.99 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு வழிவகை செய்கின்றன. இவற்றில் 11,523.74 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கிலும், 6,191.25 கோடி ரூபாய் மூலதனம் மற்றும் கடன் கணக்கிலும் அடங்கும்.

2019 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 8 ஆம் நாளன்று 2018-2019 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள் சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் "புதுப் பணிகள்" மற்றும் "புது துணைப் பணிகள்" குறித்து ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினங்களுக்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறுவதும், எதிர்பாரா செலவு நிதியிலிருந்து விடுவிக்கப்பட்ட தொகையினை அந்நிதிக்கு ஈடு செய்வதும் இத்துணை மானியக் கோரிக்கையின் முக்கிய நோக்கங்களாகும்.

2019 ஆம் ஆண்டில் பொங்கல் பண்டிகையை சிறப்பாகக் கொண்டாடுவதற்கு அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும், குடும்பம் ஒன்றிற்கு 1,000 ரூபாய் நிதியுதவி வழங்குவதற்காக 2,019.11 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அனுமதித்துள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 13-உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 12-35

கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மற்றும் தமிழ்நாடு பொதுத் துறை சர்க்கரை ஆலைகளின் நிலுவைக் கடன்களை பங்கு மூலதன உதவியாக மாற்றுவதற்கு 1,562.28 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில்

@ 270 முதல் 276 வரையிலான பக்கங்களில் அச்சிடப்பட்டுள்ளன.

2019 பிப்ரவரி 14] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

"மானியக் கோரிக்கை எண் 27-தொழில் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. ஊதியத் திருத்தத்தின்படி, ஓய்வூதியம் வழங்குவதற்காக 1,345.60 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. இச்செலவினத்திற்காக, 2018-2019 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் 1,322.58 கோடி ரூபாய் "மானியக் கோரிக்கை எண் 50-ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் மறுநிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும். இந்திய ரிசர்வ் வங்கியால் பரிந்துரைக்கப்பட்ட நெறிமுறைகளின்படி, தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்திற்கு ஒருமுறை பங்கு மூலதனமாக 1,200 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அனுமதித்துள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 14-எரிசக்தித் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

வறட்சி மற்றும் கஜா புயலினால் வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள, வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழ்பவர்களுக்கு, சிறப்பு நிதியுதவியாக குடும்பம் ஒன்றிற்கு 2,000/- ரூபாய் வழங்குவதற்காக, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 1,200 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. இதற்காக, 2018-2019 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் 700 கோடி ரூபாய் மற்றும் 500 கோடி ரூபாய், முறையே "மானியக் கோரிக்கை எண் 42-ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை" மற்றும் "மானியக் கோரிக்கை எண் 34-நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்கு, தொகுக்கப்பட்ட ஓய்வூதியம் மற்றும் விடுப்புக் கால ஊதியம் போன்ற ஒருமுறை வழங்கப்படும் ஓய்வூதியப் பலன்களுக்காக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 1,968.74 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. இதற்காக, 2018-2019 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் 1,350.90 கோடி ரூபாய் "மானியக் கோரிக்கை எண் 50-ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் மறுநிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2019 பிப்ரவரி 14

2018-2019 ஆம் ஆண்டில், மாநிலப் போக்குவரத்துக் கழகங்களுக்கு டீசல் விலை இழப்பீட்டிற்காக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 333.07 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. இத்தொகை, 2018-2019 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 48-போக்குவரத்துத் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு முதலீட்டு மானியமாக 200 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கூடுதலாக அனுமதித்துள்ளது. இதற்காக, 2018-2019 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் 161.47 கோடி ரூபாய் "மானியக் கோரிக்கை எண் 44-குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் மறுநிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018-2019 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. எஸ். ஆஸ்டின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு clarification.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, என்னவென்று சொல்லுங்கள்.

திரு. எஸ். ஆஸ்டின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இதெல்லாம் ஏற்கெனவே approve செய்யப்பட்டது. இதையெல்லாம் நீங்கள் clarification என்ற முறையில் கேட்க முடியாது. நீங்கள் வேறு ஏதோ கேட்கிறீர்கள் என்று நான் அனுமதித்துவிட்டேன். இதைத்தான் கேட்பீர்களென்று தெரிந்திருந்தால், நான் அனுமதித்திருக்க மாட்டேன். இது தேவையில்லை, விடுங்கள். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2019 பிப்ரவரி 14] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

2018–2019 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்கள் குறித்த இறுதித் துணை நிதிநிலை அறிக்கை

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
1	மாநிலச் சட்டமன்றம்	2	-	1,10,00
2	ஆளுநர் மற்றும் அமைச்சரவை	5,27,60	-	-
3	நீதி நிருவாகம்	75,80,24	-	-
4	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	45	9,74,76	7,10
5	வேளாண்மைத் துறை	1,575,31,32	8	8,50
6	கால்நடை பராமரிப்பு கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	38,10,83	1,37,86	-
7	மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	13	-	-
9	பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை	45,32,36	2	64,50
10	வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	20,62,08	-	28,24

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2019 பிப்ரவரி 14

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
11	முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	9	-	-
12	கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	9,79,06	-	21,12,97
13	உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	2,019,10,80	50,96,85	-
14	எரிசக்தித் துறை	6	1,200,00,02	3
15	சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	2,45,07	-	-
16	நிதித் துறை	621,87,08	-	61,77
17	கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை)	8	34,81	-
18	கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை)	12,09,77	-	-

2019 பிப்ரவரி 14] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
19	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	1,241,08,71	4	37,50
20	உயர் கல்வித் துறை	23,27	1	102,74,00
21	நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை	27,64,05	20	-
22	காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	50,43,79	4,28,14	1,99,87
23	தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	42,45,43	1	-
24	சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	21,45,78	14,06,69	-
25	இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்- நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	35,10,57	-	-
26	வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	10	-	-
27	தொழில் துறை	39,09,18	1,601,13,27	247,91,72

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2019 பிப்ரவரி 14

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
28	செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	18,34,69	-	-
29	சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	5,80,55	7	12,49
30	எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	53,51,43	43,46	-
31	தகவல் தொழில்நுட்பவியல் துறை	5	1	-
32	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை	22	18,58,80	44,95
33	சட்டத் துறை	2,61,07	-	28,00
34	நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	500,00,13	10	769,55,19
35	பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை	14,61,29	-	-
36	திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை	7	1	38,87

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
37	மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	6,84,74	-	-
38	பொதுத் துறை	68,39,33	-	-
39	கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)	24	24	40,49
40	பாசனம் (பொதுப் பணித் துறை)	63	9,46,56	-
41	வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை	70,89,59	2	65,64
42	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை	1,494,16,78	-	44,00
43	பள்ளிக் கல்வித் துறை	160,11,90	3	29,49
44	குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை	161,47,42	1	-
45	சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை	45	11,45,52	24,99
46	தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	34,60,89	-	25,99

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2019 பிப்ரவரி 14

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
47	இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	25,02,59	-	-
48	போக்குவரத்துத் துறை	135,78,27	2	1,230,38,03
49	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	39,56,95	-	-
50	ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	2,673,48,18	-	-
51	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	78,54,74	-	-
52	மாற்றுத் திறனாளிகள் நலத் துறை	25,54,66	22,51	-
53	சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை	1	-	12,49
54	வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	9	11	-
	பெரு மொத்தம்	11,452,64,88	2,922,10,23	2,380,56,82

9. அறிவிப்புகள்

(அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2018-2019, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2018-2019 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது: